KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2, No. n05 (2018)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in05.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கவி கா.மு. ஷெரீபின் பத்ர் போரின் பின்விளைவுகள்

Kavi Ka.Mu. Sheriff's "The Aftermath of the Battle Badr"

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 15 January 2018
Revised: 20 January 2018
Accepted: 25 January 2018

Article ID
KIJTS-2018-0047

Peer review
Double-blind peer review

Keywords
Ka.Mu. Sheriff
Battle of Badr
Islamic history
early Muslim community
Hijrah
Madinah
social transformation
political consequences
social justice
human values.

ABSTRACT

This article examines the historical, social, political and ethical consequences of the Battle of Badr as presented in Kavi Ka.Mu. Sheriff's work, "The Aftermath of the Battle of Badr." It situates the battle within the wider transformation of Arabian society during the early period of Islam, drawing attention to the social conditions that preceded the migration to Madinah, the inequalities and injustices prevalent in the community, and the emergence of a new social order based on faith, responsibility and collective welfare. The study discusses the Battle of Badr, fought on the seventeenth of Ramadan in the second year after the Hijrah, not merely as a military encounter but as a decisive historical event that altered the political position and social confidence of the early Muslim community. It considers the consequences of the battle for the Muslims and the Quraysh, the challenges faced by the defeated, and the changing balance of power in the region. Particular attention is given to the author's presentation of leadership, social responsibility, human dignity, discipline, unity and moral commitment. By relating the events of Badr to their subsequent historical developments, the work highlights the battle's significance in the formation of a community-oriented social and political order. The article therefore explores how Ka.Mu. Sheriff's narrative connects historical explanation with ethical reflection and makes the aftermath of Badr meaningful for understanding social change and human values.

How to cite this article: Dr. U. Alibava (2018). கவி கா.மு. ஷெரீபின் பத்ர் போரின் பின்விளைவுகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(n05), 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in05.1
Copyright and licence: © 2018 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

மின்னஞ்சல் : alibavapkm@gmail.com

சுருக்கம்

கவி கா.மு. ஷெரீபின் "பத்ர் போரின் பின்விளைவுகள்" என்னும் படைப்பில் முன்வைக்கப்படும் பத்ர் போரின் வரலாற்று, சமூக, அரசியல் மற்றும் அறநெறி விளைவுகளை இக்கட்டுரை ஆராய்கிறது. இஸ்லாத்தின் தொடக்க காலத்தில் அரேபிய சமூகத்தில் நிகழ்ந்த விரிந்த மாற்றத்தின் பின்னணியில் இப்போரை நிலைநிறுத்தி, மதீனா ஹிஜ்ரத்துக்கு முன்னிருந்த சமூகச் சூழல், சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள், அநீதிகள், மற்றும் நம்பிக்கை, பொறுப்பு, கூட்டு நலன் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட புதிய சமூக அமைப்பின் தோற்றம் ஆகியவற்றை இது சுட்டிக்காட்டுகிறது.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமலான் மாதம் பதினேழாம் நாள் நிகழ்ந்த பத்ர் போரை, வெறும் போர் மோதலாக மட்டுமன்றி, தொடக்க கால முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நிலையையும் சமூகத் தன்னம்பிக்கையையும் மாற்றியமைத்த ஒரு தீர்மானகரமான வரலாற்று நிகழ்வாக இவ்வாய்வு விவாதிக்கிறது. முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்கும் இப்போர் விளைவித்த பின்விளைவுகள், தோற்றவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அப்பிரதேசத்தில் மாறிய அதிகார சமநிலை ஆகியன ஆராயப்படுகின்றன.

தலைமைத்துவம், சமூகப் பொறுப்பு, மனித கண்ணியம், ஒழுக்கம், ஒற்றுமை, அறநெறிப் பிடிப்பு ஆகியவற்றை நூலாசிரியர் முன்வைக்கும் முறைக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்படுகிறது. பத்ர் போர் நிகழ்வுகளை அவற்றைத் தொடர்ந்த வரலாற்று வளர்ச்சிகளோடு இணைத்து, சமூகம் சார்ந்த சமூக-அரசியல் அமைப்பு உருவாவதில் இப்போரின் முக்கியத்துவத்தை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. எனவே, கா.மு. ஷெரீபின் விவரிப்பு வரலாற்று விளக்கத்தை அறநெறிச் சிந்தனையோடு இணைத்து, சமூக மாற்றத்தையும் மனித மாண்புகளையும் புரிந்துகொள்வதற்கு பத்ர் போரின் பின்விளைவுகளை எவ்வாறு பொருள்பொதிந்ததாக ஆக்குகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்

கா.மு. ஷெரீப்; பத்ர் போர்; இஸ்லாமிய வரலாறு; தொடக்க கால முஸ்லிம் சமூகம்; ஹிஜ்ரத்; மதீனா; சமூக மாற்றம்; அரசியல் விளைவுகள்; சமூக நீதி; மனித மாண்புகள்.

கவி கா.மு. ஷெரீப் தமிழ்க் கவிதை உலகிலும் தமிழ் எழுத்துலகிலும் குறிக்கத்தக்க பெருங்கவிஞராவார். இவர் திருவாரூர் மாவட்டத்திலுள்ள அபிவிருத்திஸ்வரம் என்னும் ஊரில் 11.09.1914 அன்று பிறந்தார். காதர்ஷா, இபுராஹிம் பாத்தும்மாள் ஆகியோர் இவருடைய பெற்றோராவர். வறுமை காரணமாக பள்ளி சென்று பயிலாத இவர் தாய் தந்தையரிடமும் மற்றோரிடமும் சென்று தாமாக முயன்று கல்வி கற்றார். இளமையிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்ற இவர் தமிழ் இலக்கிய வகைமைகள் பலவற்றுள்ளும் கால் பதித்துள்ளார். கவி கா.மு. ஷெரீப் அடிப்படையில் கவிஞராக

இருப்பினும் அவர் கவிதைப் படைப்போடு மற்றும் நின்று விடவில்லை. சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு மாமனிதராகத் திகழ்ந்தார்.

இலக்கியமும் வரலாறும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் அனுபவங்களையும், அரசியல் மாற்றங்களையும், பண்பாட்டு அடையாளங்களையும் வெளிப்படுத்தும் முக்கியமான அறிவுத்தளங்களாக விளங்குகின்றன. குறிப்பாக, சமய வரலாற்றில் நிகழ்ந்த போர்கள் வெறும் இராணுவ மோதல்களாக மட்டும் அமைவதில்லை. அவை மக்களின் உரிமை, நம்பிக்கை, வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு, அரசியல் விடுதலை போன்ற பல்வேறு கூறுகளுடன் தொடர்புடையவையாக அமைகின்றன. அத்தகைய வரலாற்று நிகழ்வுகளில் இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது பத்ருப் போராகும். இப்போரின் தோற்றத்திற்கான காரணங்கள், அக்கால அரேபியச் சமூகத்தின் நிலை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமையியல், தோழர்களின் பங்களிப்பு, போரின் விளைவுகள் ஆகியவற்றை விளக்குகின்ற நூலாகக் கவி கா.மு. ஷெரீப்பின் பத்ர் போரின் பின் விளைவுகள் அமைந்துள்ளது.

இந்நூல் 1991 மார்ச் மாதத்தில் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல், பத்ருப் போரின் வரலாற்றுப் பின்னணியை உரையாடல் மற்றும் நிகழ்வுச் சித்திரிப்பு வழியாக எடுத்துரைக்கிறது. நூலின் முன்னுரையில் ஆசிரியர் வரலாற்றுச் செய்திகளை வெறும் தகவல்களாக அல்லாமல், அவற்றின் காரண காரியத் தொடர்புகளுடன் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளார்கள். முதலில் "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தம் வாழ்க்கையை நான்கு நிலையாக வகுத்துள்ளார்கள் வரலாற்றாளர்கள்.

1. பெருமானாரின் பிறப்பிலிருந்து நபிப்பட்டம் பெறுகின்ற வரையில்.

2. நபிப்பட்டம் பெற்ற பின்னர் மதின மாநகரினுக்கு ஹிஜ்ரத் புறப்படுகின்ற வரையில்.

3. மதின மாநகர வாழ்க்கையில் ஹிஜ்ரி முதலாண்டு முற்பகுதி வரையில்.

4. அதன் பின்விளைவுகள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகில் வாழ்ந்த காலம் 63 ஆண்டுகள். இவற்றுள் நபிப்பட்டம் பெறுவதற்கு முந்தைய ஆண்டுகள் 39.

நபிப்பட்டம் பெற்றதிலிருந்து மக்கம மாநகரில் இறைவனின் தூதர் என்ற நிலையில்

மட்டும் வாழ்ந்த காலம் 13 ஆண்டுகள். மதின மாநகரில் இறைத்தூதர் எனும்

அருளாளராகவும் அரசோச்சும் ஆட்சி நெறியாளராகவும் வாழ்ந்த காலம் 11

ஆண்டுகள்.

இந்தப் பதினோரு ஆண்டுகளிலுங்கூட ஓராண்டுக் காலம் அதிக அளவில் தொல்லைகளின்றி இஸ்லாமிய சன்மார்க்க நெறி விளக்கம் செய்த காலமாகும். இந்த ஓராண்டையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், பத்து ஆண்டுகளில் நபியாக மட்டுமன்றி நாடாளும் வேந்தராகவும் வாழ்ந்துள்ளார்கள் நம் பெருமானார் (ஸல்) அவர்கள் என்பது தெரியும்" (பத்ர் போரின் பின்விளைவுகள், பக். 1-2) என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிக் குறிப்படும் கவிஞர்,

“அறநெறியைவிட மறநெறியே மேலெனக் கருதி வாழ்ந்த மக்கள் அரபு நாட்டு மக்கள். அடிமை வாழ்வினராக இல்லாவிடினும் அரசோச்சியோ ஆட்சி நெறிக்குட்பட்டோ வாழ்ந்தறியா மக்கள் அம்மக்கள். கோத்திரச் சண்டை, குலச்சண்டையெனக் காலமெலாம் சண்டையிட்டு அழிவதே தொழிலெனக் கொண்டவர்கள் அந்த மக்கள்.

மது, மாது, பொய், சூது, களவு, மோசடி, ஏமாற்று, நயவஞ்சகம், வழிப்பறி, வட்டி எனும் தசமகாபாதகங்களின் மொத்த உருவமாக வாழ்ந்த அந்த மக்களை, சிறு தவறும் செய்யாத செந்நெறி வாழ்வினராக மாற்றியதும் இந்தப் பத்தாண்டுகளில்தான்.

உணவு, உடை, உரை, உணர்வு, ஓதல், தொழுகை, பணிவு, பண்பு, கனிவு, எளிய வாழ்க்கை, ஈகை வாழ்க்கை, அறவாழ்க்கை, அழிவற்ற அறிவுநெறி வாழ்க்கை - இப்படி, யாவற்றிலுமே ஒரு நெறிப்பட்டவர்களாக ஒரு நாட்டை, நாட்டு மக்களைப் பத்தே ஆண்டிற் குள் பக்குவப்படுத்திய மாபெரும் சாதனைக்குரியவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர்த்து வேறு யார் உண்டு இவ்வுலகத்தில்? இல்லை, இல்லை; இல்லவே இல்லை என்பதுதான், உண்மை பகர்கின்ற உலக வரலாற்றாளர்களின் ஒட்டுமொத்தக் கணிப்பு.

இந்த வெற்றியாளரை விவேக மிக்க அறநெறியாளரை உலகம் உற்று நோக்க ஆரம்பித்தது பத்ர் போருக்குப் பின்னர்தான்” (பத்ர் போரின் பின்விளைவுகள், ப. 2) எனவும் அறபு நாட்டு மக்களையும் இஸ்லாமிய வரலாற்றில் பத்ர் போரின் முக்கியத்துவத்தையும் விளக்குகிறார்.

பத்ருப் போருக்கான வரலாற்றுப் பின்னணி

பத்ருப் போரைப் புரிந்துகொள்வதற்கு அக்கால அரேபியச் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூகச் சூழலை அறிந்துகொள்வது அவசியமாகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமியக் கொள்கைகளை எடுத்துரைத்த காலத்தில் மக்கா நகரில் பல்வேறு எதிர்ப்புகள் உருவாகின. ஏகத்துவக் கொள்கை, சமத்துவம், மனிதநேயம், அடிமைத்தனத்திற்கு எதிரான சிந்தனை போன்றவை அக்காலத்தில் நிலவிய சமூக ஆதிக்க முறைகளுக்குச் சவாலாக அமைந்தன.

குறிப்பாக, மக்காவின் குறைஷியர் சமூகத்தில் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கைக் கொண்டிருந்தனர். புதிய சமயக் கொள்கையின் வளர்ச்சி அவர்களின் சமூக ஆதிக்கத்திற்கும் வணிக நலன்களுக்கும் அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. இதனால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் பல்வேறு இன்னல்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளானார்கள்.

“களிப்புற்றிருக்கப் பிறந்தவர்களல்லவே பெருமானார் (ஸல்) அவர்கள். அவ்வாறு இருக்குமாறு அவர்களைப் படைத்திடவில்லையே வல்லநாயகன். நம்மை எதற்காகப் படைத்துளான் இறைவன் என்பதை நம்முள் பலர் அறியாதிருக்கலாம். அறிந்தும் ஆசையின் காரணமாகச் செய்பணியைத் துச்சமென ஒதுக்கி, செய்யத் தகாதனவற்றைச் செய்வோராகவும் நம்முள் சிலர் இருக்கத்தானே செய்கிறோம்.

ஆனால், நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறானவர்கள் அல்லவே. இறைவனின் விதிப்பை, கட்டளையை இம்மியும் பிசகாது நிறைவேற்று வோர்களாயிற்றே.

மகிழ்ச்சி, மனப்போதையில் எழுவது. இறை நம்பிக்கையை அவன் கட்டளையை அவன் விதிப்பை நிறைவேற்றிடும் பொறுப்பு எனும் அமுதத்தை மனத்துள் நிரப்பிவிட்டால்? ஞானமெனும் நல்லறிவுத் திட்பத்தை இதயத்தில் இருத்திவிட்டால்? இஸ்லாமியக் கொள்கையை - கோட்பாட்டினை மானுடர் மனத்தில் அகலாது பதித்து விட்டால்!

இத்தகு அற்புதத்தை நடத்திக்காட்ட ஆண்டவனால் அனுப்பப்பட்டிருந்த நாயகம் (ஸல்) அவர்களின் மனம், விஷத்தை ஏற்று அதை அமுதமாக மாற்றிவிடும் ஆற்றல் பெற்ற மனம். அத்தகைய ஆற்றல் பெற்ற நாயகம் (ஸல்) அவர்களின் மனத்திலே, அறியாமையால் அநியாயமாகப் போரிட்டிறந்த துரோகிகளான மக்காவாசிகள் பற்றிய அவர்களின் மனைகள் தோறும் அழுகை மிகைத்திருக்குமே என்பது பற்றிய ஆதங்கமிருந்தது. சிறைபிடிக்கப்பட்டு வந்திருப்போரின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய சிந்திப்பிருந்தது. யூத பனூகைனுகாஃ கூட்டத்தாரின் அடாத செயல்களுக்கு முடிவு காணவேண்டிய கட்டாயக் கடமையிருந்தது. இவற்றுக்கிடையே பத்ருப் போரின் வெற்றிவீரராக மதீன மாநகரில் கடமையாற்றிடும் நினைவுடன் இருக்கிறார்கள் நாயகம் (ஸல்) அவர்கள்" (பத்ர் போரின் பின்விளைவுகள், ப.6) என்று கவிஞர் நபிகளாரின் மனநிலையைப் பதிவு செய்கிறார்.

"கருணையும் உவமை கூறிட இயலா இரக்கமும் உடைய நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளம், சிலருடைய இல்லங்களிலேனும் அழுகை ஓயட்டுமே என எண்ணித் தானே இருக்கும்! அகிலத்திற்கே அருட்கொடையாக வந்தவர்களல்லவா அவர்கள். கட்டப்பட்டிருக்கிறார்கள் பிடிபட்டு வந்த 74 பேர்களும். அப்பாஸ் (ரலி) அவர்கள் உடல் பருத்தவர்கள். கட்டுகளின் இறுக்கத்தால் வருந்துகிறார்கள். சிறிய தந்தையாயிற்றே! அவர்களின் கட்டுகளைத் தளர்த்திவிடச சொன்னால் என்ன? இரங்கும் மனமுடைய ரஸூல் (ஸல்) அவர்களின் மனம் இப்படியா சிந்திக்கும்? தம் சிறிய தந்தையைப்போல்தாமே ஏனையோரும் வருந்துவார்கள். 'எல்லாருடைய கட்டுகளையும் தளர்த்திவிடுங்கள்' என உத்தரவிடுகிறார்கள்" (பத்ர் போரின் பின்விளைவுகள், பக். 7-8) எனும் இடத்தில் கவிஞர் நபிகளாரின் மனிதநேயத்தைப் புலப்படுத்துவதற்காகக் காட்டுகிறார்கள்.

இன்னும் சில இடங்களையும் கவிஞர் நூலில் குறிப்பிடுகிறார். பத்ர் போரில் பிடிபட்டோரை என்ன செய்யலாம்? அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்? என்பது குறித்துப் பேசப்படுகிறது. அதற்கு நபிகளார் தருகிற தீர்வினைக் கவிஞர், "பிடிபட்டோருள் ஏழைகளுமிருந்தனர். அவர்களின் நிலையறிந்த நாயகம் (ஸல்) அவர்கள், ஈட்டுத்தொகை பெற்றிடாமலேயே அவர்களை விடுவித்தனுப்பினார்கள். கைதிகளுள் கற்றோர் சிலரும் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் 10 பிள்ளைகளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்து விடுதலை பெற்றேகிட அனுமதிக்கப்பட்டனர். கல்வி போதித்திடுங்காலை அவர்களுக்கு உணவும்

உறைவிடமும் நல்ல முறையில் வழங்கிடவேண்டும் எனவும் உத்தரவிட்டார்கள். அவ்வாறாகவே அளிக்கப்பட்டது. பிள்ளைகளுக்குக் கல்வி போதித்து மகிழ்வுடன் விடுதலை பெற்றேகினார்கள். கைதிக் கல்விமான்கள். இஸ்லாம் கல்வியின் அவசியத்தை எவ்வாறு மதிக்கின்றது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு" (பத்ர் போரின் பின்விளைவுகள், ப.11) என்று காட்டுகிறார்.

நூலின் விளக்கத்தில் கவிஞர் குறிப்பிட்ட மக்காவில் நிலவிய சமூகப் பாகுபாடுகளும், இஸ்லாமியக் கொள்கையை ஏற்றுக்கொண்ட மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளும் பத்ருப் போருக்கான நீண்டகாலப் பின்னணியைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

மக்காவிலிருந்து மதீனாவிற்கான ஹிஜ்ரத்

இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரத் எனப்படும் மக்காவிலிருந்து மதீனாவிற்கான இடப்பெயர்வு மிக முக்கியமான திருப்புமுனையாகும். மதநம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட துன்புறுத்தல்களிலிருந்து விடுபட்டு, பாதுகாப்பான சூழலில் சமய மற்றும் சமூக வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான வரலாற்று நடவடிக்கையாக இது விளங்கியது.

மதீனாவிற்குச் சென்ற முஸ்லிம்கள் புதிய சமூக அமைப்பை உருவாக்க வேண்டிய சூழ்நிலையை எதிர்கொண்டனர். அங்கு ஏற்கெனவே வாழ்ந்திருந்த பல்வேறு சமூகக் குழுக்களுடன் இணைந்து வாழ்வதற்கான சூழலும் உருவானது. ஹிஜ்ரத் என்பது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்ற நிகழ்வு மட்டுமல்ல; புதிய சமூக வாழ்வை உருவாக்கிய வரலாற்றுச் செயல்பாடாகவும் இந்நூலின் விவரிப்பில் அமைகிறது.

ஆய்வு நோக்கில், ஹிஜ்ரத் நிகழ்வு சமயச் சுதந்திரம், மனித உரிமை, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

பொருளாதார நெருக்கடியும் குறைஷியரின் எதிர்ப்பும்

பத்ருப் போரின் பின்னணியை ஆராயும்போது பொருளாதாரக் காரணிகளையும் புறக்கணிக்க முடியாது. மக்காவிலிருந்து மதீனாவிற்கு இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தங்களுடைய சொத்துகள், வணிக வாய்ப்புகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்திருந்தனர். அவர்களின் முந்தைய வாழ்க்கைச் சூழல் மாறியிருந்தது. மறுபுறம், குறைஷியரின் வணிக நடவடிக்கைகள், வணிகக் குழுக்களின் பயணங்கள், வணிகப் பாதைகளின் பாதுகாப்பு ஆகியவை அக்கால அரசியல் சூழலுடன் தொடர்புபட்டிருந்தன. நூலில் வணிகக் குழுக்களின் பயணம், அபூசுஃப்யானின் தலைமையிலான வணிக நடவடிக்கைகள், முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்கும் இடையிலான முரண்பாடுகள் ஆகியவை பத்ருப் போருக்கு முன்னோடியாக அமைந்த சூழ்நிலையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

இதிலிருந்து போர்கள் பல நேரங்களில் வெளிப்படையான இராணுவ மோதலுக்கு முன்னரே பொருளாதார நெருக்கடிகள், அரசியல் ஆதிக்கம், சமூகப் பாதுகாப்பு போன்ற காரணிகளால் உருவாகின்றன என்ற வரலாற்றுப் பார்வையைப் பெறலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைத்துவம்

பத்ருப் போரின் வரலாற்றில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைப் பண்பு தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. ஒரு சமூகத்தை வழிநடத்துவதற்கு ஆன்மிக நம்பிக்கை மட்டுமன்றி, அறிவாற்றல், தொலைநோக்குப் பார்வை, ஆலோசனை பெறும் பண்பு, பொறுப்புணர்வு ஆகியவையும் அவசியம் என்பதை இந்நூலில் இடம்பெறும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

போருக்கான சூழ்நிலை உருவானபோது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோழர்களுடன் ஆலோசனை நடத்துவது, அவர்களின் கருத்துகளைக் கேட்டறிவது, போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்வது போன்ற நிகழ்வுகள் விவரிக்கப்படுகின்றன. இதன் வழியாக கூட்டுப் பொறுப்புணர்வு, ஆலோசனை அடிப்படையில் முடிவெடுத்தல், கடினமான சூழ்நிலையிலும் மன உறுதியுடன் செயல்படுதல், தோழர்களின் நம்பிக்கையைப் பெறுதல் போன்ற தலைமைத்துவப் பண்புகள் வெளிப்படுகின்றன. இவ்வாறு பத்ருப் போர் வெறும் இராணுவத் தலைமையின் அடிப்படையில் மட்டுமல்லாமல், சமூகத் தலைமையின் அடிப்படையிலும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

பத்ருப் போரின் நிகழ்வுகளும் போர்த்தந்திரங்களும்

பத்ர் போர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமலான் மாதம் பிறை 17இல் நடந்தது. பத்ருப் போர் இஸ்லாமிய வரலாற்றில் முக்கியமான இராணுவ மோதலாகக் கருதப்படுகிறது. முஸ்லிம்களின் எண்ணிக்கை, அவர்களிடம் இருந்த போர்க்கருவிகள், எதிரிகளின் இராணுவ வலிமை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருந்ததாக நூல் எடுத்துரைக்கிறது.

போர் நிகழ்ந்த இடத்தின் அமைப்பு, நீர்நிலைகளின் முக்கியத்துவம், வீரர்களின் அணிவகுப்பு, படை ஒழுங்கு, போருக்கான திட்டமிடல் ஆகியவை நூலில் விவரிக்கப்படுகின்றன. போர்க்களத்தில் வீரர்கள் வெளிப்படுத்திய துணிவு, ஒற்றுமை, தியாக உணர்வு ஆகியவை வரலாற்றுச் செய்திகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. போரின் வெற்றியை வெறும் எண்ணிக்கை அடிப்படையில் அணுகாமல், மன உறுதி, ஒற்றுமை, தலைமைத்துவம், இறைநம்பிக்கை, திட்டமிடல் ஆகியவற்றின் தொடர்பில் புரிந்துகொள்ளும் பார்வையை இந்நூல் முன்வைக்கிறது.

போரில் பங்கேற்ற வீரர்களின் பங்களிப்பு

பத்ருப் போரில் பங்கேற்ற தோழர்களின் பங்களிப்புகள் இந்நூலில் முக்கியத்துவம் பெறுகின்றன. அவர்கள் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் போரில் ஈடுபட்ட நிகழ்வுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. நூலின் இறுதிப்பகுதிகளில் போரில்

உயிர்த்தியாகம் செய்தவர்களின் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இது போரில் பங்கேற்றவர்களின் வரலாற்றுப் பங்களிப்பை ஆவணப்படுத்தும் பகுதியாக அமைந்துள்ளது (பத்ர் போரின் பின்விளைவுகள், பக். 64-66). இப்பட்டியல் மூலம் பத்ருப் போர் என்பது ஒரு தனிநபரின் வெற்றியாக அல்லாமல், பலருடைய பங்களிப்பு, ஒற்றுமை மற்றும் தியாகத்தின் விளைவாக அமைந்த வரலாற்று நிகழ்வு என்பதை அறிய முடிகிறது.

பத்ருப் போரின் வெற்றியும் வரலாற்று விளைவுகளும்

பத்ருப் போரின் வெற்றி முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. மதீனாவில் உருவாகியிருந்த முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக நிலை வலுப்பெறுவதற்கு இப்போர் முக்கியக் காரணியாக அமைந்தது.

இப்போரின் வெற்றியால் முஸ்லிம் சமூகத்தின் தன்னம்பிக்கை அதிகரித்தது; மதீனாவில் அவர்களின் சமூக அமைப்பு வலுப்பெற்றது; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டது; குறைஷியரின் அரசியல் ஆதிக்கத்திற்கு எதிரான புதிய சூழல் உருவானது. இஸ்லாமிய வரலாற்றின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கும் இப்போர் அடித்தளமாக அமைந்தது.

போரின் அறவியல் மற்றும் மனிதநேயச் சிந்தனைகள்

போர் என்பது வெற்றி, தோல்வி என்ற இரு நிலைகளோடு மட்டும் தொடர்புடையதல்ல. அதனுடன் மனித உயிர்கள், குடும்பங்களின் இழப்புகள், சமூகப் பாதுகாப்பு, அறநெறிகள் போன்ற பல்வேறு கூறுகளும் தொடர்புபட்டுள்ளன.

பத்ருப் போரின் நிகழ்வுகளை விளக்கும்போது மனிதர்களின் மன உறுதியும், இறைநம்பிக்கையும், தியாக உணர்வும் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. போரில் பங்கேற்றவர்களின் செயல்பாடுகள் அவர்களின் தனிப்பட்ட வீரத்தை மட்டுமல்லாமல், சமூகத்தின் மீதான பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

இந்நூலை அறவியல் நோக்கில் அணுகும்போது மூன்று சிந்தனைத் தளங்கள் புலப்படுகின்றன. இறையியல் என்பது இறைவன் மீதான நம்பிக்கையையும் இறைநம்பிக்கையின் அடிப்படையில் மன உறுதியைப் பெறுதலையும் குறிக்கிறது. அறவியல் என்பது ஒற்றுமை, தியாகம், துணிவு, நேர்மை, பிறருக்காகப் பொறுப்பேற்றல் போன்ற பண்புகளை முன்னிறுத்துகிறது. மெய்யியல் என்பது மனித வாழ்க்கையின் நோக்கம், நம்பிக்கையின் வலிமை, வாழ்வியல் போராட்டங்கள், மன உறுதி ஆகியவற்றைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

கவி கா.மு. ஷெரீபின் மொழி நடை

கவி கா.மு. ஷெரீப் வரலாற்று நிகழ்வுகளைப் படிக்கின்றவர்களுக்குப் புரியும் வகையில் உரையாடல் தன்மையுடன் எடுத்துரைக்கிறார். நூலில் இடம்பெறும்

உரையாடல்கள், வினாக்கள், நிகழ்வுகளின் தொடர்ச்சி ஆகியவை வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன.

வரலாற்றுச் செய்திகளை எளிய மொழியில் எடுத்துரைத்தல், நிகழ்வுகளுக்கான காரணங்களை விளக்குதல், உரையாடல் வழியாக வரலாற்றை நகர்த்துதல், வரலாற்று ஆளுமைகளின் செயல்பாடுகளை முன்னிலைப்படுத்துதல், சமயக் கருத்துகளையும் சமூக வரலாற்றையும் இணைத்துக் கூறுதல் ஆகியவை இந்நூலின் நடைச்சிறப்புகளாகக் கருதப்படுகின்றன.

ஆசிரியர் கேள்வி எழுப்பி அதற்கான விளக்கத்தை வழங்கும் முறையைக் கையாள்வதால், நூல் வெறும் வரலாற்றுத் தகவல்களின் தொகுப்பாக இல்லாமல் சிந்திக்கத் தூண்டும் உரைநடைப் படைப்பாகவும் அமைந்துள்ளது.

நூலின் ஆதாரங்களும் வரலாற்று ஆவணத் தன்மையும்

ஒரு வரலாற்று ஆய்வின் நம்பகத்தன்மை அதில் பயன்படுத்தப்படும் ஆதாரங்களைப் பொறுத்து அமைகிறது. இந்நூலின் இறுதிப் பகுதியில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை குறிப்பாக வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களாக உள்ளன. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்களும் அப்பட்டியலில் உள்ளன (பத்ர் போரின் பின்விளைவுகள், பக. 67). இதன் மூலம் ஆசிரியர் பத்ருப் போரைப் பற்றிய செய்திகளைத் தனிப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் மட்டுமே அணுகாமல், ஏற்கெனவே வெளிவந்த வரலாற்று நூல்களின் துணையுடன் விளக்க முயன்றுள்ளமை புலப்படுகிறது.

கவி கா.மு. ஷெரீபின் ‘பத்ர் போரின் பின்விளைவுகள்’ எனும் நூல் பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, பத்ருப் போரின் வரலாற்றை அதன் சமூக மற்றும் அரசியல் பின்னணியுடன் இணைத்து விளக்குகிறது. இரண்டாவதாக, ஹிஜ்ரத் நிகழ்வையும், மக்கா மற்றும் மதீனா சமூகங்களின் நிலைகளையும் போரின் காரணிகளுடன் தொடர்புபடுத்துகிறது. மூன்றாவதாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைப் பண்புகளையும், தோழர்களின் பங்களிப்புகளையும் எடுத்துரைக்கிறது. நான்காவதாக, போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களின் பெயர்களைத் தொகுத்தளிப்பதன் மூலம் வரலாற்று நினைவுப் பதிவாகவும் அமைகிறது. ஐந்தாவதாக, நூலின் இறுதியில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களைப் பட்டியலிட்டிருப்பது அதன் ஆவணப் பயன்பாட்டை வெளிப்படுத்துகிறது. ஆய்வுநோக்கில் பார்க்கும்போது, நூலின் உரையாடல் நடை படிப்பவர்களுக்கு எளிமையை வழங்கினாலும், சில வரலாற்றுச் செய்திகளைத் தற்கால வரலாற்று ஆய்வுகளுடனும் மூல அரபு ஆதாரங்களுடனும் ஒப்பிட்டு விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. மேலும், போரின் அரசியல், பொருளாதார விளைவுகளைத் தனித்தனி ஆய்வுத் தலைப்புகளாகப் பிரித்து ஆராய்ந்தால் நூலின் வரலாற்றுப் பரிமாணத்தை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

கவி கா.மு. ஷெரீபின் ‘பத்ர் போரின் பின்விளைவுகள்’ என்னும் நூல் இஸ்லாமிய வரலாற்றின் முக்கியமான நிகழ்வான பத்ருப் போரைப் பல்வேறு கோணங்களில் அணுகும் வரலாற்று உரைநடைப் படைப்பாகும். இந்நூல் போரின் தோற்றத்திற்கான காரணங்கள், மக்கா மற்றும் மதீனா சமூகங்களின் நிலை, ஹிஜ்ரத் நிகழ்வு, பொருளாதார முரண்பாடுகள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைத்துவம், தோழர்களின் பங்களிப்பு, போரின் வெற்றி மற்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக எடுத்துரைக்கிறது. பத்ருப் போர் என்பது வெறும் இராணுவ வெற்றியாக மட்டுமல்லாமல், ஒரு சமூகத்தின் தன்னம்பிக்கை, ஒற்றுமை, தலைமைத்துவம், நம்பிக்கை ஆகியவற்றின் வரலாற்று வெளிப்பாடாகவும் அமைகிறது என்பதை இந்நூல் உணர்த்துகிறது. குறிப்பாக, வரலாற்றை மக்களுக்கு எளிய உரைநடையில் கொண்டு சேர்க்கும் ஆசிரியரின் அணுகுமுறை குறிப்பிடத்தக்கது. வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியை அறிய விரும்புவோருக்கும், இஸ்லாமிய வரலாற்றை ஆய்வுசெய்யும் மாணவர்களுக்கும் இந்நூல் பயனுள்ள துணைநூலாக அமைகிறது. எனவே, கவி கா.மு. ஷெரீபின் ‘பத்ர் போரின் பின்விளைவுகள்’ எனும் நூல் இஸ்லாமிய வரலாற்றையும், சமூக மாற்றங்களையும், அறவியல் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்துப் புரிந்துகொள்ள உதவும் குறிப்பிடத்தக்க படைப்பாகும் என்பது வெளிப்படுகிறது. **துணைநூல்**

References

ஷெரீப், கவி கா.மு. பத்ர் போரின் பின்விளைவுகள், சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித் தெரு, சென்னை - 600 002, முதற் பதிப்பு : மார்ச் 1991.